மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 55/2019

**2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 08–ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி. P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சத்தியமூர்த்தி @ கணேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : ரத்தினம் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : தழுதாழை | சமயம் | : |
| சாதி | : | வயது | : 65/2024 |

**முதல் விசாரணை :**

1 (i) நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவா சொத்திற்கு எனது தாயார் பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா எண்.184–ற்குரிய பட்டாவின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது பெயரிலும், எனது தந்தை பெயரிலும் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகளின் அசலை(17 எண்ணிக்கை) தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.2** (17 எண்ணிக்கை) ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கு எனது பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா எண்.184–ற்குரிய பட்டாவின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது தாயார் பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகளின் அசலை(2 எண்ணிக்கை) தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.4** (2 எண்ணிக்கை) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(ii) தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகளின் அசலை (14 எண்ணிக்கை) தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.5** (14 எண்ணிக்கை) ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகளின் அசல்களை (12 எண்ணிக்கை) தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.6** (12 எண்ணிக்கை) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன். பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.